செ.கு.வா. நிதி (ஓய்வூதியம்) துறை

பொருள்: செ.கு.வா – நிதி – ஓய்வூதியம் – 2023–24 ஆம் ஆண்டிற்கான உயிர் சான்றிதழ் வழங்குவதற்குரிய கால அவகாசம் மற்றும் உயிர் சான்றிதழ் வழங்குவதற்கான அரசின் புதிய நடைமுறை குறித்து அறிவுறுத்துதல் – தொடர்பாக.

பார்வை: அரசு ஆணை எண். 165, நாள் 31.05.2023.

**********

பார்வையில் குறிப்பிட்டுள்ள அரசு ஆணையில் உயிர் சான்றிதழ் வழங்கும் புதிய நடைமுறையை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன் மூலம், உயிர் சான்றிதழ் நேரடியாக அளிக்க விரும்புவோர் ஒவ்வொரு ஆண்டும் சென்னைக் குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்திலோ (எண்.1, பம்பிங் ஸ்டேஷன் சாலை, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 2) அல்லது இணைய வழியாகவோ அல்லது தபால் துறை மூலமாகவோ கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மாதங்களில் உயிர் சான்றிதழ் அளிக்க வேண்டுகின்றோம்.

| ஓய்வூதியர்கள் வகைப்பாடு | உயிர் சான்றிதழ் அளிக்க வேண்டிய மாதம் |
|---|---|
| சாதாரண ஓய்வூதியதாரர்கள் | தாங்கள் பணி ஓய்வு பெற்ற மாதத்தில் மட்டுமே "உதாரணமாக ஒருவர் ஜூலை மாதம் ஓய்வு பெற்றிருந்தால் அவர் ஜூலை மாதத்தில்" |
| பணிக்கால ஓய்வூதியம் (ம) குடும்ப ஓய்வூதியம் இரண்டும் பெறுபவர்கள் | |
| குடும்ப ஓய்வூதியதாரர்கள் மற்றும் சிறப்பு ஓய்வூதியம் பெறுபவர்கள் | அவர்களுக்கு அந்த ஓய்வூதியம் எந்த மாதத்தில் தொடங்கப்பட்டதோ அந்த மாதத்தில் |

**கூடுதல் கால அவகாசம் :**

உயிர் சான்றிதழ் அளிக்க கூடுதலாக ஒரு மாத காலம் மட்டுமே அவகாசம் எடுத்துக்கொள்ளலாம் அதுவும் தவறும் பட்சத்தில் ஓய்வூதியம் நிறுத்தப்படும்.

"உதாரணமாக ஜூலை மாதம் ஓய்வு பெற்ற ஒருவர் ஜூலை மாதத்தில் உயிர் சான்றிதழ் அளிக்க வேண்டும் இல்லையேல் ஆகஸ்ட் மாத இறுதிக்குள் உயிர் சான்றிதழ் அளிக்க வேண்டும். அதுவும் தவறும் பட்சத்தில் செப்டம்பர் மாதம் முதல் ஓய்வூதியம் நிறுத்தப்படும்.

.மேலும், நடப்பு ஆண்டில்(2023-24) ஏப்ரல், மே, ஜுன் மாதத்தில் உயிர் சான்று அளிக்க வேண்டியவர்கள் சிறப்பு நேர்வாக இந்த வருடம் ஜுலை 2023-ல் உயிர் சான்றிதழ் அளிக்கலாம். மற்றவர்கள் அவரவர் ஓய்வு பெற்ற மாதங்களில் பதிவு செய்து கொள்ளலாம்.

மேலும், உயிர் சான்றிதழ் நேரடியாக அளிக்க வரும் ஓய்வூதியதாரர்கள் தாங்கள் வரும் பொழுது ஆதார் நகல், ஓய்வூதிய புத்தகம் மற்றும் 2 புகைப்படம் (புதிய மருத்துவ காப்பீடு அட்டை புதுப்பிக்க) கொண்டு வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலும், அரசாணையில் ஓய்வூதியதாரர்கள் வயது முதிர்வு மற்றும் ஓய்வூதியம் பெறுவதற்காக நேரில் ஓய்வூதிய அலுவலகத்திற்கு வருகின்ற சிரமம் கருத்தில் கொண்டு, ஜீவன் பிரமான் என்ற செயலி மூலம் இணைய வழியாக உயிர் சான்றிதழ் பெறுவதை ஊக்குவிக்க அரசு அறிவுறுத்தியுள்ளது மற்றும் இனி வரும் காலங்களில் குறைந்தபட்சம் 80% ஆவது இணைய வழி மூலம் உயிர் சான்றிதழ் பெறுவதை உறுதிசெய்யவும் அரசு அறிவுறுத்தியுள்ளது.

எனவே ஓய்வூதியம் பெறுவோர் தங்களது அருகாமையிலுள்ள தபால் துறை (அ) இ-சேவை மையம் மூலமாக தங்கள் இருப்பிடத்திலிருந்தவாறே இணைய வழியாக உயிர் சான்றிதழ் அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஆகையால், ஓய்வூதியதாரர்கள் இந்த இணைய வழி சேவையை பயன்படுத்தி தாங்கள் உயிர் சான்றிதழ் அளிக்க வேண்டிய மாதங்களில் உயிர் சான்றிதழ் அளிக்க அறிவுறுத்தப்படுகின்றது.

ஒப்பம்/- 20.06.2023

**நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர்**

**/உ.ந.உ.ப.அ/**

L Bhayani 27/6/23

**துணை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர்**

Dy Controller of Finance
C M W S S B
1, PUMPING STATION ROAD
Chintadripet, Chennai-600 002